
# இலங்கை எவ்வழி?



# எதிர்காலத்திற்கு ஒரு கைநூல்


இந்நூலை பிரசுரிக்க உதவிய எல்லோருக்கும்
எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை தார்மீக புனருத்தாருண
நண்பர்களால் பிரசுரிக்கப்பட்டது.

வாழ்க்கை ஓர் எரிமலையின் மேல் வாழ்வதைப் போன்று அசௌகரியமானதாக இருப்பதை எங்களைப் போலவே நீங்களும் உணர்ந்திருப்பீர்கள். அந்த எரிமலை எந்த நேரத்தில் வெடித்துச் சிதறும் என்பது எவருக்கும் தெரியாது.

எனவே இந்த உலகத்தில் என்னதான் நடக்கிறது?இன்றைய சிக்கலுக்குள் எம்மை ஆழ்த்தியது எது? இதற்காக நாம் என்ன செய்ய முடியும்? என்பதை ஆராய்ந்து பார்க்கத் தீர்மானித்தோம்

இப்படிக்கு
உங்கள் சக ஆய்வாளர்கள்



பல ஆண்டுகளுக்கு முன்னர்
இலங்கையில் உன்னதமான
ஒரு நாகரீகம் இருந்தது.



அடுத்த படியாக

# காலனி ஆதிக்கம் உருவானது



அதன் பின்னர் நாம்




காலடி எடுத்து வைத்தோம்


இன்றைய நிலை என்ன?

நமக்குச் சுதந்திரம்
உண்டு
என்றாலும்
பிரிவினை,
ஊழல்,
சுரண்டல்,
வன்முறை.



எமது மக்களுக்கு—

வீடு,

உணவு,

வேலை வாய்ப்பு,


கல்வி,

கைத்தொழில் முன்னேற்றம்

ஆகியன தேவை




சுதந்திரத்திற்கான போராட்டத்தில் நாம் ஒன்றுபட்டிருந்தோம்.




ஒரு புதிய இலங்கையை உருவாக்குவதற்கு அதைவிட விரிவான நோக்கம் தேவை.

இதனை நாம் எப்படி அடைவது?



நாம் புதிய சமுதாயத்தை

ஏட்டளவிலே திட்டமிடலாம்



பொதுவுடமை அமைப்புக்கு

பெறும் அதிகாரம் உண்டு

## ஆனால் இங்கும் யுத்தங்கள்.

- சர்வாதிகாரம்,
- மாயை,
- பிரிவினை,
- ஆகியவையே உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தவறுகளையே நாம் மீண்டும்

செய்ய வேண்டுமா?

இவ்வுலகை வேதனைக்குள் ஆழ்த்திய

இத்தவறுகளை எங்களால் திருத்த

முடியாதா.



ஆனால் புதிய மனிதர்க

ளாலேயே அதனை நிர்மா

ணிக்க முடியும்

ஐக்கியப்பட்ட, நீதியான,

தன்னலமற்ற, யாரால் அது

உருவாக்கப்படுகிறதோ அப்

படியே அந்த சமுதாயம்

அமையும்.


## முதலாளித்துவ அமைப்புக்கு பெரும் செல்வம் உண்டு


ஆனால் அதன் வாழ்நாளில்,

- யுத்தங்கள்,
- சர்வாதிகாரம்,
- பிரிவினை,
- மாயை,

ஆகியவையே உருவாக்கப்பட்டுள்ளன.

# இலங்கையின் எதிர்காலம் என்ன?






''பகையை பகையால்
வெல்லமுடியாது
பகையை அன்பினால்
மாத்திரமே வெல்லமுடியும்.''

''பிறரின் குறைபாடுகள்
எளிதில் கண்டுபிடிக்கப்
படுகின்றன, ஆனால்
தன் சொந்தக்குறைபாடுகள்
கண்ணுக்குத் தெரிவதில்லை''

''கோபப்படுபவனை அன்பினால் வெல்
தீயவனை நல்லெண்ணத்தால் வெல்
உலோபியை தயாள குணத்தாலும்,
பொய்யனை உண்மையாலும் வெல்ல
முடியும்.'' என்று புத்தர் கூறுகின்றார்.

''சுகபோகங்களில் நாட்டமில்லாத
வனும் ''நான்'' ''என்னுடைய'
என்னும் மமதை இல்லாதவனும்
சாந்தி அடைகிறான்'' என்று இந்து
சமயம் கூறுகிறது

''பகவத் கீதை'





நபிகள் நாயகம் சொன்னார்:-

''மக்கள் தங்களைத் தாங்களே
மாற்றிக் கொள்ளாவிட்டால், இறை
வன் நாட்டை மாற்ற மாட்டான்—''

திருக்குர்ஆன்

ஏசுநாதர் சொன்னார்:-

''இதய சுத்தி உள்ளவர்கள் பாக்
கியவான்கள், உனக்குத் தீங்கிழைத்த
வனை ஏழுமுறை அல்ல ஏழு எழுபது
முறை மன்னித்து விடு''

பைபிள்




இந்தச் சவால்களைச் சந்திப்பதற்கு

நாம் மனிதனை
நவீனமயப் படுத்த
வேண்டும்




ஆம் மனிதனை நவீன மயப் படுத்த வேண்டும்


சந்திர மண்டலத்துக்குச் சென்றடைந்தவனும் அணுவைத் தகர்தவனும், தான் மட்டும் நவீனமடைய வில்லை.



பகைமை, பேராசை, பயம் ஆகிய வைகளில் அவன் இன்னும் ஆதிமனிதனுகவே இருக்கின்ருன்.

அணுவாயுத யுகத்தில் பிற இனம், சாதி, நாடு ஆகியவற்றில் பகைமை கொள்வது தற்கொலைக்கு ஒப்பாகும்.

அது எமக்குச் சுய அழிவையே ஏற்படுத்தும்.



இயற்கை சக்திகளை அடக்கியாளக்

கற்றுக் கொண்டோம்.

இப்போது நாம் **மனித சுபாவத்தின்**


சக்திகளை அடக்கியாளக் கற்றுக்

கொள்ள வேண்டும்.

பின்வரும் **கேள்வி**களுக்கு, நாம்


விடையளிக்க வேண்டும்.





சிலர் மிகப்பெரும் பணக்காரர்க


ளாகவும் . . . .




ஏனையோர் பரம ஏழைகளாகவும்

இருப்பதற்குக் காரணம் என்ன?

சிலர் கைப்பாவைகளாக மாறி விட்டார்களா?





ஒரு நாடு
வெளித்தாக்குதலுக்கு
இலக்காவதற்கு முன்பே
அது உள்ளுக்குள்ளேயே
எப்படி நலிவடைகிறது?

மனிதரும், நாடுகளும் தவருன
வழியில் செல்லமுடியும்.

ஏனென்ருல்

அவர்கள் தம்முள்ளேயே இருக்கும்
தன்னலம் என்னும் எதிரியை
ஒழித்துக்கட்டாத காரணத்தால்.

## சுயதேவை அப்படி என்றால்:-

எனக்கு வேண்டியது எது?


எப்போது? எப்படி?


மற்றவர் எக்கேடு கெட்டால்

எனக்கென்ன?



அனைவர் மத்தியிலும் இது காணப் படுகிறது






இல்லையா?




உங்களை வழி

நடத்துவது எது?

இதோ சில வழிகள்


பணம்:-




## விளைவுகள்

**இலஞ்சம்,**-தேர்தலில் ஊழல்,
வேலை ஒப்பந்தங்கள், வகுப்புக்கலவரம்,
சதித்திட்டங்கள், வர்த்தகம்,
கைத்தொழில் ஆகியவற்றில் ஈடு பட்டுள்ளோர்
தன்நம்பிக்கை இழத்தல், ஆகையால்வேலையில்லா
திண்டாட்டம்.

## காமம்:




**விளைவுகள்:** விபச்சாரம்,

சிதைந்த குடும்பங்கள்,


மேக ரோகங்கள்,

அச்சுறுத்திப் பணம் பறித்தல்,

பால்யகுற்றவாளிகள்,

குடியும்,

போதை வஸ்தும்:-



விளைவுகள்:-

தடுமாற்றமுள்ள மனிதர்,


சோம்பல்,

ஒழுக்கயீனம்,

ஆசைக்கு அடிமையாகி மற்றவர்க

ளால் அடக்கப்படுதல்

சுயநலநோக்கம்



## விளைவுகள்:-

இனவெறி, அதிகாரவெறி,

குடும்பத்திற்கு தனிச்சலுகை,

திறமையின்மை, பிரிவினை,

வகுப்புக்கலவரம்.

பகைமை:-

விளைவுகள்:-

பயம்,
பழி வாங்கல்,
பிரித்தழித்தல்
கொலை



* * * * * * * *


இத்தகைய கொள்கைகளைக் கொண்டோரை நம்பி நாட்டின் அலுவல்களையோ வேறுவேலைகளையோ ஒப்படைக்க முடியாது.

எமக்குத் தேவை . . .

யார் சரி என்றில்லாமல்




எது சரி என்று தீர்மானம் எடுக்கக்




கூடிய மனிதர்கள்.


எதுசரி? அதுசரிஎன்பதை, எப்படி நான் அறிவேன்.
சட்டங்களை
காலைச்செய்தி
இணக்கம்
நன்றி

கட்டிடக்கலைஞனும், கட்டுபவனும்
நிலையான பிரமாணங்களின்படி
அக்கட்டிடத்தைக் கட்டாவிட்டால்
அக்கட்டிடத்தின் நிலை என்னாகும்?

இயந்திர வியலுக்கு இருப்பது
போலவே மனித சமுதாயத்திற்கும்
நிலையான விதிகள் உண்டு.



நிலையான பிரமாணங்களின் படி நாம் எமது வாழ்க்கையைப் பரீட்சித்துப் பார்க்காதபடியால் சமுதாயம் வீழ்ச்சியுறப்போகும் ஆபத்தில் உள்ளது.






இதோ அந்தப் பிரமாணங்கள்:-



புதிய யுகத்தில் நான்கு
சம்பூர்ண- நேர்மை :-
தேசிய ஒற்றுமை பாதுகாப்பு செல்வம் ஆகியவற்றிற்கு ஒரு நேர் பாதை
சம்பூர்ண தூய்மை
நேர்மையான எண்ணமுடையவர்கள் பிழையான வாழ்க்கை வாழ முடியாது.



தூண்கள் இவைகளாகும்
சம்பூர்ண த
ன்னலமின்
மை :-
எல்லோரது
தேவைக்கும்
போதுமானது
உலகத்தில் உ
ண்டு. ஆனால்
எல்லோரது பே
ராசைக்கும்
போதுமானது
கிடையாது.
சம்பூர்ண
அன்பு:-
ஒவ்வொருவ
ரையும் தக்கமு
றையில் கவனி
த்து தக்கமுறை
யில் பகிர்ந்தளி
த்தால் ஒவ்வொ
ருவருக்கும் தேவை
யான அளவு
கிடைக்கும்.




பிரமாணங்கள் சம்பூர்ணமாக இருக்க வேண்டும். இல்லையேல் அவை பிரமாணங்களே அல்ல




தடை இல்லாத


வண்டியும்

நீரில் சிறிது நேரம்

மிதக்கும் வள்ளமும்


யாருக்கு வேண்டும்







ஆனல் எமது வாழ்கை முறைகளை

மாற்ற வேண்டும் போலிருக்கிறதே?






''நல்லவர்கள் பேசாமல் இருந்தால்,

தீயவர்கள் வெற்றியடைவார்கள்.''

''எட்மண்ட் பார்க்''




ஒவ்வொருவனும் அடுத்தவன்
மாறவேண்டும் என்று
எதிர்பார்க்கின்றான்.




ஒவ்வொரு நாடும் மற்றநாடு
மாற்றமடைய வேண்டுமென
எதிர்பார்க்கிறது.




ஆனால் அடுத்தவன்
ஆரம்பிக்கட்டும் என்று
எல்லோரும் காத்திருக்கிறார்கள்.

உனது நாட்டுக்கும், உலகத்திற்கும்
ஒரு மாற்றம் வேண்டும் என
நீ உண்மையிலேயே விரும்பினால்
அதனை ஆரம்பிக்க வேண்டிய
சிறந்த இடம் உன் உள்ளமும்
உன் நாடுமே

யார்? நானா?



# நான் எப்படி மாறமுடியும்?

மனிதர், தமது சமயத்தின்

அடிப்படை படிப்பினைகளுக்கேற்ப

வாழாவிட்டால் சமுதாயத்தின்

வீழ்ச்சிக்கே அவர்கள் வழி

வகுப்பவர்கள் ஆவார்கள்.

கடவுள் எமக்கு

இரண்டு காதுகளையும்,





ஒரு வாயையும்,

கொடுத்துள்ளார்.

நாம் பேசக்கூடிய அளவு இரு மடங்கு செவிசாய்த்தால் என்ன?

நான்கு சம்பூர்ண தார்மீக பிர
மாணங்களை பரிட்சித்த பின்னர்:-

உனது ஆத்மாவின் ஒலிக்கு நீ
செவிசாய்த்தால், புதிய சிந்தனைகள்
ஊற்றெடுக்க ஆரம்பிக்கும். இந்த
சிந்தனைகள் புதிய சமுதாயத்துடன்
உனக்கு ஒரு தொடர்பினைஏற்படுத்தும்.

நீ யார் என்பதோ எங்கிருக்கிறாய்
என்பதோ பிரச்சனை அல்ல
உன்னுள்ளே இருக்கும் தெய்வீகக்
குரல் சரியான தேவையானவழிகளைக் காட்டும்.

இந்தப் புதிய ஒலியால் மனித சுபா
வம் மாற்றமடையும். மனித சுபா
வத்தின் மாற்றத்தால் புதிய மனிதர்
புதிய சமுதாயம், புதிய உலகம்
உருவாகும்.

# ஞாபகம் இருக்கட்டும்


அழுகிப்போன காய்கறிகளைக் கொண்டு நல்ல உணவைத் தயாரிக்க முடியாது. அது போல தீய மனிதர்களைக் கொண்டு புதிய நாட்டை உருவாக்க முடியாது.

இதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள் நான் நாட்டின் வியாதியைத் தீர்க்கும் மருந்தா? அல்லது வியாதியா?






ஒரு பெண்சிலையும் பேப்பரையும் எடுங்கள் உங்கள் சிந்தனைகளை அதில் எழுதுங்கள் அவை சாதாரண விடயங்கள் போலத்தான் தோன்றும். ஆனால் ஒன்று உண்மையைத் தவிர வேறெதையும் எழுதக் கூடாது. ஒரு முறை அதனைப்படித்துப் பாருங்கள். பல விடயங்களில் நீங்கள் திருந்திக் கொள்ள மன்னிப்புக்கேட்க வேண்டியவர்களாய் இருப்பீர்கள்



## மனித சுபாவம் மாற்றப்படலாம்

எமது பிரச்சனையின் மூலவேரே

அதுதான்

## தேசியப் பொருளாதாரம் மாற்றப்

## படலாம்

இதுவே புது சித்தாந்தத்தின் கனி

## உலக சரித்திரத்தையும் மாற்ற

## முடியும

எமது யுகத்தின் முடிவும் அதுவே




இந்த அணுயுகத்தில் மிக
சக்திவாய்ந்த சாதனம் ஒரு
மனிதனின் இதயத்தினதும்
ஒரு நாட்டின் வருங்காலத்தினதும்
தெய்வீக ஒளி.

# இலங்கைக்கு ஒரு குறிக்கோள் உண்டு

உன்னை நீ மாற்றி அமைத்துக் கொள்

வதன்மூலம் ஆரம்பிக்கலாம்.

உனது நண்பர்களையும் குடும்பத்தையும்,

இதில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

சமுதாயத்திலும் நாட்டிலும் உள்ள

குறைபாடுகளை அகற்ற ஒன்றாகத்

தீர்மானம் எடுங்கள்.

## உனக்கொரு பாகம் உண்டு

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆகிய நாடுகள் உலகம் முழுவதுக்குமாக தார்மீகப் புனருத்தாரண இயக்கத்திற்கு சேவை புரிய சங்கல்பம் பூண்டுள்ளன.

இது மிகத்துணிகரமான, கஷ்டமான பணியாகும்



சகலரும்
தேவை

சகல கட்சிகளும்,

சகல இனங்களும்,


சகல வகுப்புகளும்,

சகல வர்க்கத்தினரும்,

சகல சாதியினரும் . . . .

உலகத்தை மாற்றியமைக்க ஒரு சாதாரண மனிதனுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம்.





1952ம் ஆண்டு இலங்கையில்
ஆரம்பித்த ஆசிய பயணத்தின்
போது ''பிராங் புக்மன்'
பின்வருமாறு கூறினர். ''கடவுளின்
வழிகாட்டுதலினுல் ஒரு ஒற்றுமையான
சமுதாயத்தின் பிரச்சனைகள் யாவும்
தீர்ந்துவிடும்.''

பசித்த வயிற்றுக்கு உணவு

கிடைக்கும்.





வெற்றுக் கைகளுக்கு வேலை

கொடுக்கப்படும்.

வெற்று மனதுக்கு திருப்திகரமான
வாழ்க்கை வகுத்துக் கொடுக்கப்படும்





அப்போது . . . .

தொழிற்சாலைகள் :-

வீடுகள் :-

படைகள் :-

மந்திரிகள் :-

நாடுகள் :-



எல்லோருக்கும் தேவையான அளவு உற்பத்தி செய்யும்.

அடுத்த வாரிசுகளை அழிவிலிருந்து காப்பாற்றும்.

புதிய தார்மீக பிரமாணபயிற்சிகளை தனது நாட்டிற்களிக்கும்.

ராஜதந்திரிகள் முதலானோர் எதிரிகளையும் நண்பர்களாக்குவதன் மூலம் மிகவும் பயனளிக்கும் சக்தியுள்ளவர்களாவார்கள்.

அழிவிலிருந்து மாயையிலிருந்து மீண்டு ஒளிவிட்டு பிரகாசிக்கும்.

இதுதான் எங்கள் எதிர்காலம் சாத்தியமானது.

மேலும் விபரங்களுக்கு தார்மீக புனருத்தாருணத்திற்கு எழுதுக

## ஆசியா :

த. பெ. இல: கொழும்பு, ஸ்ரீ லங்கா

ஆசியா பிளட்டோ, பஞ்சகானி, மஹாராஷ்ட்ரா, 412805 இந்தியா

4—1—34 சென்டாகி, புங்கியோ-கு, டோக்கியோ—113—ஜப்பான்

## ஆபிரிக்கா :

த. பெ. இல: 14510 நயிரோபி கென்யா

த. பெ. இல: 2102 லாகோஸ் நைஜீரியா

த. பெ. இல; 71735 என்டோலா செம்பியா

9 டீல் சாலே அலெக்சாந்ரா பார்க் ஹரேரே நகரம் — சிம்பாப்வே

## ஐரோப்பா:

மவுண்டன் ஹவுஸ் CH—1824 கோ. சுவிட்சர்லாந்து

12 பெலஸ் வீதி லண்டன் SWIE SJF ஐக்கிய ராஜ்ஜியம்

68 Bd பிலேன்ரின் 75116 பாரிஸ் பிரான்ஸ்

